நிலமற்ற விவசாயிகளுக்கும் நிலவளவங்கிகள் மூலம் கடன் வழங்கும் திட்டம்.

504—(*வினா எண். 17101)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நிலமற்ற விவசாயிகளுக்கும் நிலவள வங்கிகளின் மூலம் கடன் கொடுக்கின்ற திட்டத்தைச் செயல் படுத்த உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) நிலவள வங்கிகள் நிலமற்ற விவசாயிகள் தாங்கள் பயிர் செய்யும் நிலத்தையோ அல்லது புதிதாக நிலங்கள் வாங்கிப் பயிர் செய்ய விரும்பும் நிலத்தையோ விலைக்கு வாங்க உயர்ந்த பட்சக் கடனாக ரூ. 7,500-ம் அந்நில அபிவிருத்திக்காக, தேவை யானால் மேற்கொண்டு கடனும் அளிக்கப்படுகின்றன. அரசு உத்திரவாதத்தின்பேரில் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற இதர பல்வேறு காரியங்களுக்கு திட்ட அடிப்படையில் அரசின் உத்திரவாதத்தின்பேரில் மத்திய காலக்கடனும் வழங்கு கின்றன.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இப்போது நிலவள வங்கிகளிலிருந்து கடன் வழங்கப்படுவதில்லை. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு அரசு சிபாரிசு செய்தால் அங்கே பல நிபந்தனைகளைப் போட்டு அங்கேயும் கடன் கிடைக்கவில்லை. ஆகவே அதைப்பற்றி அரசு பரிசீலித்து நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு, கிராமப் புறங்களில் இருக்கக்கூடியவர்களுக்கு நிலவள வங்கிகளின் மூல மாக கடன் கொடுக்க அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். பெரிய அளவிலே 153 பிரதம நிலவள வங்கிகளின் சார்பிலே உயர்ந்தபட்சம் 7,500 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகின்றது. சொந்தமாக நிலம் இல்லாமல் இருந்தாலும் அவர்கள் உழுகின்ற நிலங்களைச் சீர்செய்யவோ அல்லது சொந்தமாக நிலங்களை வாங்கிக்கொள்ள வோ இந்த வகையில் 7,500 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகின் கின்றது.

1984 மார்ச் 29]

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கடனில் மானியம் உண்டா? மானியம் ஏதும் இருக்கின்றது என்றால் இந்த 7,500 ரூபாய் வரை கொடுக்கப்படுகின்ற கடனில் எவ்வளவு தொகை மானியமாகக் கொடுக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தக் கடனில் மானியம் இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறத்திலுள்ள நிலமற்ற ஏழை, எளிய விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த நிலங்களை அபிவிருத்தி செய்ய நிலவள வங்கிகள் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த நிலவள வங்கிகளை, பயிர் செய்கிற நிலமற்ற விவசாயிகள் அணுகுகிற நேரத்தில், அந்த நிலத்தை அவர்கள்தான் பயிர் செய்கிறார்கள் என்று சொல்லி குத்தகைப் பதிவு செய்திருந்ததற்கு அத்தாட்சி கேட்கப்படுகிறது. அத்தகைய அத்தாட்சி பெற முடியாத நிலைமையில், அந்த வசதியைப் பெற முடியாத நிலைமையில் இருக்கிறார்களே, அரசு அதற்குண்டான முறையில் வருவாய்துறை அதிகாரியின் அத்தாட்சியை வைத்து, அந்த நிலத்தைப் பயிர் செய்கிறாரா என்று கண்டறிந்து அவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான சான்றிதழும் இல்லாமல் கடன் வழங்குவது இயலாத ஒன்றாகும். அதிகாரிகளிடத்தில் வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் ஆகியோர்களிடத்திலே சான்றிதழ் அல்லது அவர்கள் சம்பந்தப்பட்ட வி. ஏ. ஓ.க்களிடத்தில் சான்றிதழ் பெற்றுக் கொடுத்துப் பின்னால் தான், அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் நிலத்தை உழுபவர்கள் என்கிற சான்றிதழ் பெற்றால்தான் கடன் வழங்க முடியும். அந்த முறைதான் நடைமுறையிலே இருக்கிறது.

சத்துணவு திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை.

505 —(*வினா எண் 13850) —திரு. செ. செம்மலை: மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன ?

(ஆ) அதற்காகச் செலவிடப்படும் தொகை எவ்வளவு ?